**ஆனி 3, 2019 - வழிபடுத்து குழு சந்திப்பு**

இதற்கு முந்திய காலங்களில் தமிழ்ச் சமூக மையம் ஒன்றினை உருவாக்க முயன்றதாகச் சுட்டிக்காட்டிய அமைப்புகளின் ஆய்வுகள் பற்றி அவர்களுடன் தொடர்பு கொண்டதை உறுதிப்படுத்தி இராமச்சந்திரன் கூட்டத்தை ஆரம்பித்தார். இராமச்சந்திரன், ராங் இருவரும் இங்கு ஏற்கெனவே இயங்கிவருகின்ற சீன, ஆர்மானிய, கொரிய, உக்ரேனிய சமூக மைய அமைப்புகளுடனான சந்திப்புகளை ஒழுங்குசெய்வதற்காக அவர்களுடன் தொடர்பு கொண்டுள்ளார்கள். விமலச்சந்திரன், ராங், சண் ஆகியோர் அரசாங்க ரீதியிலான தமது சந்திப்புகளைப் பற்றிய தகவல்களை குழுவுடன் பகிர்ந்துகொண்டார்கள்.

சமூக ஈடுபாட்டை உள்வாங்கி ஊக்குவிக்கும் வழிவகைகளை வளர்தெடுப்பது பற்றியும் கலந்துரையாடப்பட்டது. சமூக அமைப்புகளின் பட்டியல் ஒன்று விமலச்சந்திரனால் முன்வைக்கப்பட்டு, அவற்றுடன் தொடர்புகொண்டு ஆதரவைத் திரட்டும் பணி ஒவ்வொருவருவருக்கும் பிரித்துக் கொடுக்கப்பட்டது. இந்த நிறுவனங்களிடமிருந்து கோரவேண்டிய ஆதரவுக் கடித மாதிரி ஏற்றுகொள்ளப்பட்டது. நகரசபையில் நடாத்தவுள்ள பகிரங்கப் பொதுக்கூட்டத்துக்கு முன்னதாக இந்நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு அவற்றின் ஆதரவைத் திரட்டும் பணிக்கு மிக முக்கியமான முதலிடம் கொடுக்கப்படவேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மொழிபெயர்க்கப்பட்ட ஆவணங்களும், இணையம் மூலமான கருத்துக் கணிப்புப் படிவமும் அடுத்த வார இறுதிக்குள் சமூக நிறுவனங்களுக்கு அறிமுகப்படுத்துவதற்கு தயார் நிலையில் இருக்கும் என விமலச்சந்திரன் உறுதிப்படுத்தினார். இந்த இணைய மூலமான கருத்துக்கணிப்புப் படிவத்தை எந்தெந்த வகைகளில் சமூகத்திற்கு எடுத்துச்செல்ல முடியும் என்பது பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

ஆடி 14ம் திகதி நகரசபை மண்டபத்தில் நடாத்தத் திட்டமிட்டுள்ள பகிரங்கப் பொதுக்கூட்டத்துக்கான திட்ட நிரலாக்கல் பற்றியும் ஆராயப்பட்டது.

--------------------